THIRU K. VINAYAKAM : My question arises out of the answer given by the Hon. Chief Minister. The Hon. Chief Minister has been pleased to state on the floor of the House that the City Compensatory Allowance has been granted to the teachers. Is he aware of the fact that it is not ganted to the teachers employed by private managements in the City of Madras?

THE HON. THIRU C. N. ANNADURAI : I am sorry the hon. Member is not following the proceedings in the newspapers. I have assured them that.

மின் இறைவை பாசனத் திட்டங்கள்

*457 வினா—திரு. ஆ. கு. சுப்பையா : மதிப்பிற்குரிய பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் 1966-ம் ஆண்டு முடிய எத்தனை மின் இறைவை பாசனத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன?

(இ) நடப்பு ஆண்டில் மேலும் எத்தனை திட்டங்கள், எங்கெங்கே நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் 1966-ம் ஆண்டு முடிய ஒன்பது (9) மின் இறைவைப் பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன ?

(இ) 6 (ஆறு) திட்டங்கள் நடப்பு ஆண்டில் கீழ்க்கண்ட இடங்களில் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளன.

(1) ஒக்கநாடு கீழயூர், ஒரத்தநாடு வட்டம்.

(2) ஐமூர், திருத்துறைப்பூண்டி வட்டம்.

(3) வளவனாறு விஸ்தரிப்பு, திருத்துறைப்பூண்டி வட்டம்.

(4) மங்கல், திருத்துறைப்பூண்டி வட்டம்.

(5) விளாங்காடு, திருத்துறைப்பூண்டி வட்டம்

(6) கீழ்த்தங்கையாறு, திருத்துறைப்பூண்டி வட்டம்.

திரு. செ. பாலசுப்ரமணியன் : வேளாங்கண்ணி இறைவைத் திட்டத்தைப் பொறுத்த வரையில், நல்ல நீரோடு கடல் நீர் புகுந்துவிடுவதால், மூன்று வருடங்களாக விவசாயிகளுக்குப் பிரயோசனம் இல்லாமல் இருந்தது. இப்பொழுதுதான் பயன் அடைந்திருக்கிறார்கள். இம்மாதிரி ஏற்படாமல் இருக்க, அரசாங்கம் இனியாவது ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இப்பொழுது செய்தது போலவே தொடர்ந்து செய்யும்.

திரு. கரு. சீமைச்சாமி : இதற்காகச் சர்க்காரால் கொடுக்கப்பட்ட கடன் தொகை எவ்வளவு ? இதனால் எத்தனை ஏக்கர் நிலங்கள் அதிகமாக சாகுபடிக்கு வரும்?

1967 நவம்பர் 27]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : முதலில் நிறைவேற்றப்பட்டுள்ள ஒன்பது திட்டங்களின் ஆயக்கட்டுகளைக் குறித்துத் தனித் தனியாகக் குறிப்பிடுகின்றேன். ஆய்மூர் விசையேற்றத் திட்டத்தின் மூலம் 717 ஏக்கராவிற்கும், பாமணி முள்ளியாறு திட்டத்தின் மூலம் 740 ஏக்கராவிற்கும், தீவாம்பாள் பட்டணம் திட்டத்தின் மூலம் 350 ஏக்காராவிற்கும், முள்ளியாறு விசையேற்றத் திட்டத்தின் மூலம் 1,539 ஏக்கராவிற்கும், ஆயக்காரம்புலம் திட்டத்தின் மூலம் 750 ஏக்கராவிற்கும், வளவனாறு திட்டத்தின் மூலம் 1,970 ஏக்கராவிற்கும், தென்னடாறு திட்டத்தின் மூலம் 1,040 ஏக்கராவிற்கும், வேளாங்கண்ணி விசையேற்றத் திட்டத்தின் மூலம் 2,264 ஏக்கராவிற்கும், விழுந்தமாவடி திட்டத்தின் மூலம் 1,611 ஏக்கராவிற்கும் பயன்பட்டிருக்கிறது. இவற்றிற்கான தொடக்கச் செலவுகளையெல்லாம் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுகிறது. வழக்கமான தண்ணீர்த் தீர்வை, நடைமுறைச் செலவுகள் முழுவதும் இவற்றினால் பயன்பெறுகிறவர்களிடமிருந்து விகிதம் வைத்து வசூலிக்கப்படுகிறது.

திரு. கே. பி. எஸ். மணி : இந்த இறைவைத் திட்டத்திலே சாகுபடி செய்கிற விவசாயிகளுக்கு அதிகமான செலவு ஆகிறது. இன்ஜின் போட்டு இறைக்கும்போது, அதற்கு வேண்டிய எண்ணெய் போன்ற வகைகளில் செலவு ஆகிறது. ஆகவே, வரி விதிக்கும்போது, மேற்படி செலவுக்கான தொகையைக் குறைத்துக் கொண்டு, வரி விகிதத்தைக் குறைத்து வசூலிக்க அரசாங்கம் முயற்சிக்குமா ? மேலும், தஞ்சை மாவட்டத்தில் கொள்ளிடம், உப்பனாறு போன்ற ஆறுகளைப் பொறுத்தும் இந்தத் திட்டத்தை விஸ்தரிக்க அரசாங்கம் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தஞ்சை மாவட்டத்தில் மேலும் 17 திட்டங்கள் ஆலோசனையில் உள்ளன. அவைகளில் ஒன்றாக இது இருக்குமானால், அதுபற்றி யோசிக்கப்படும்.

செலவு அதிகம் ஆகிறது என்று கனம் உறுப்பினர் குறிப்பிட்டார்கள். அதைப் போலவே, மின் இறைவைப் பாசனத் திட்டங்களை வைப்பதற்கும் அரசாங்கத்திற்குத் தொடக்கச் செலவு அதிகம் ஆகிறது. விவசாயிகளிடமிருந்து நாம் கோருவது நடைமுறைச் செலவும் தண்ணீர்த் தீர்வையும்தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்து, மூல வினாவையொட்டிய துணை வினா ஒன்றை திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் கேட்கலாம்.

திரு. வி. கே. கோதண்டராமன் : எத்தனை வருட காலத்தில் இந்தப் பணம் வசூலிக்கப்படுகிறது ? அப்படி வசூலித்ததற்குப் பிறகு, அது அந்த விவசாயிகளுக்கே ஒப்படைக்கப்படுகிறதா ? அல்லது தொடர்ந்து வசூல் செய்யப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நடைமுறைச் செலவுகளுக்காக வசூலிக்கப்படுவது திரும்ப விவசாயிகளுக்கு ஒப்படைக்கப்படுவதில்லை.

[1967 நவம்பர் 27

திரு. கே. விநாயகம்: தஞ்சை மாவட்டத்திலுள்ள வேளாங் கண்ணிக்கு அருகாமையில் இருக்கும் லிஃப்ட் இர்ரிகேஷன் ஸ்கீமை நாங்கள் நேரடியாகப் போய்ப் பார்த்தோம். அங்கிருக்கும் விவ சாயிகள், அந்த லிஃப்ட் இர்ரிகேஷன் மூலமாகத் தரப்படுகிற தண்ணீர் உப்புத் தண்ணீராக இருப்பதால், நெற்பயிருக்கு அது பயன்படாது என்று சொல்லி, அதை மறுத்து, வேண்டாம் என்று சொல்லுகிறார்கள். என்றாலும், அவர்களை நிர்ப்பந்தப்படுத்தி, நாங்கள் கீழேயிருந்து தண்ணீர் எடுத்துவிட்டோம்; ஆகவே அதைப் பயன்படுத்தித்தான் தீரவேண்டும் என்று திணிப்பதை விடுத்து, அவர்களுக்கு இதிலேயிருந்து விதிவிலக்குத் தர முடியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: திணிப்பதை எப்போதுமே இந்த அரசாங்கம் ஏற்காது. அது மாத்திரம் அல்ல. அங்கிருந்த குறைபாட்டை இந்த அரசாங்கம் போக்குவதற்குப் பல முயற்சிகள் எடுத்து, ஓரளவு போக்கியும் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தஞ்சை மாவட்டத்தை யொட்டிய துணை வினாவை மாண்புமிகு உறுப்பினர் திரு. சீமைச் சாமி அவர்கள் கேட்கலாம்.

திரு. கரு. சீமைச்சாமி: இந்த மின் இறைவைப் பாசனத் திட்டம் நல்ல திட்டமாகும். இதை வைகையாற்றுப் படுகைகளில் எங்கெங்கு வசதிகள் இருக்கின்றனவோ அங்கே விஸ்தரிக்க அரசாங் கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: எங்கெங்கு தேவை என்று கனம் உறுப்பினர் குறிப்பிட்டு, அதற்குத் தனியாகக் கேள்வி கேட்பாரானால், விவரம் சேகரித்துத் தர முடியும்.

Madras—Tindicanam Bus

* 458 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether it is a fact that the Government bus plying between Madras and Tindivanam was stopped for some time past;

(*b*) if so, the reasons therefor; and

(*c*) whether it has again been put into service?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) சென்னைக்கும் திண்டி வனத்திற்கும் இடையே தமிழக அரசுப் போக்குவரத்து பஸ் 1-10-1965 முதல் 8-11-1965 வரை, 39 நாட்கள் விடப்பட்டு, பிறகு நிறுத்தப்பட்டது.

(ஆ) போதுமான உபரி பஸ்கள் இல்லை என்று அப்போது காரணம் கூறப்பட்டது.

(இ) மறுபடியும் இப்பொழுது சென்னை-திண்டிவனம் அரசினர் பஸ் விடப்படுகிறது.